**சார்பு நீதிமன்றம், வந்தவாசி திருவண்ணாமலை மாவட்டம்.**

முன்னிலை- திருமதி.ச.சரண்யா., எம்.எல்.,

சார்பு நீதிபதி, வந்தவாசி

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 04-ம் நாள் புதன்கிழமை

**வழக்கிடை மனு எண்.05/2025 in அசல் வழக்கு எண்.339/2023**

1. கெங்கம்மாள்
2. லோகநாதன் ...... மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள்

/எதிர்/

சிந்தாமணியம்மாள் ..... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு இந்நீதிமன்றம் முன்பாக இறுதியாக 28.01.2026 அன்று விசாரணைக்கு வந்து, மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. T.விநாயகம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. எம்.எஸ்.சங்கரபாண்டியன், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், மனு மற்றும் எதிர்உரை ஆகியவற்றை பரிசீலனை செய்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்;

<u>**உத்தரவு**</u>

கடந்த 09.10.2025-ம் தேதி மேற்படி வழக்கில் பிரதிவாதிகளுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து வழக்கை மீண்டும் நடத்த உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென உ.வி.மு.ச. கட்டளை IX, விதி 7-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>**2. மனுதாரர்/ பிரதிவாதி தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்-**</u>

மேற்படி இம்மனுவில் மனுதாரர்கள் என்றும், வழக்கில் 1, 2 பிரதிவாதிகள் என்றும், மேற்படி வழக்கில் தங்கள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்ய கடந்த 09.10.2025 தேதியன்று தங்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும், மேற்படி தினத்தில் தனக்கு காய்ச்சல் ஏற்பட்டதால் 1ம் மனுதாரரான தனது தாயார் வயது முதிர்ச்சியாலும் நீதிமன்றத்தில் வழக்கறிஞரை சந்தித்து ஆஜராக இயலவில்லை என்றும், அன்றையதினம் தாங்கள் ஆஜராகததாது வேண்டுமென்றே ஏற்பட்ட செயல் அல்ல என்றும், தெய்வாதீனமாக ஏற்பட்ட தவறு என்றும், ஆகையால் 09.10.2025 தேதியன்று தங்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்துசெய்யக்கோரி இம்மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதாகவும், எனவே மனுதாரர்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யவேண்டியது நியாயமும் அவசியமும் ஆகும் என்று இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்து எதிருரையின் சுருக்கம்**:-

மனுதாரரர்கள் தாக்கல் செய்துள்ள மனு அபிடவிட்டில் சொல்லியுள்ள காரணங்கள் சற்றும் சரியல்ல என்றும், இந்த வழக்கு கடந்த 09.10.2025 அன்று இவ்வெதிர்மனுதாரரை மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்தா போடப்பட்டிருந்ததாகவும், அன்றைய தினம் தனக்கு காய்ச்சல் ஏற்பட்டதாலும் 1ம் மனுதாரரின் வயது முதிர்ச்சியாலும் தன்னுடைய வழக்கறிஞரை சந்தித்து ஆஜராக முடியவில்லை என்றும், மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவை பிறப்பித்தது என்றும், அதனால் ரத்து செய்ய வேண்டுமென்று கோரி தாக்கல் செய்துள்ள இந்த மனு நிலைக்கதக்கது அல்ல தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும், மேலும் மனுதாரருக்கு போதிய அவகாசம் வழங்கியும், இவ்வெதிர்மனுதாரரை குறுக்கு விசாரணை செய்யாததால் தான் கடந்த 09.10.2025 அன்று எக்ஸ்பார்ட்டி செய்யப்பட்டு தீர்ப்புக்காக 29.10.2025 அன்று வாய்தா போடப்பட்டதாகவும், இந்த நிலையில் மனுதாரர் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும், இந்த வழக்கு கடந்த 2 வருடங்களாகவே நிலுவையில் இருந்து விசாரணைக்கு பட்டியலில் போடப்பட்டு 17.06.2025 அன்று இவ்வெதிர்மனுதாரர் தன்னை வாதி தரப்பு முதல் சாட்சியாக விசாரணைக்கு உட்படுத்திக்கொண்டார் என்றும், எதிர்மனுதாரரை குறுக்கு விசாரணை செய்வதற்கு மனுதாரருக்கு போதிய அவகாசம் வழஙகப்பட்டும், மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரரை குறுக்கு விசாரணை செய்யவில்லை வேண்டுமென்றே எதிர்மனுதாரரை மனுதாரர்கள்

அலைகழித்ததாகவும், எனவே இந்த மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**4. <u>இங்கு தீர்மானிக்க வேண்டிய அம்சம் யாதெனில்:-</u>**

***மனுதாரர்களுக்கு எதிராக ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவு ரத்து செய்யப்படவேண்டுமா? என்பதே ஆகும்.***

i) இருதரப்பிலும் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் எதுவும் இல்லை. மனுதாரர் தரப்பின் கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தில் 1ம் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் நீதிமன்றத்தில் ஆஜராக முடியாமல் போய்விட்டது என்றும், எனவே மனுதாரர்கள் மீண்டும் வழக்கு நடவடிக்கையில் பங்கு கொள்வதற்கு ஒரு வாய்ப்பளிக்க வேண்டுமென்றும் வாதிட்டார். மாறாக எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் மனுவில் சொல்லியுள்ள காரணங்களுக்கு ஆதாரம் இல்லை என்றும், இவ்வழக்கில் வெற்றிபெறக்கூடிய வாய்ப்பு இல்லாத காரணத்தினால், காலம் கடத்தும் நோக்கில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், இம்மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டுமென்றும் வாதிட்டார்.

ii) வழக்கு ஆவணங்களை உற்றுநோக்கும் போது வழக்கின் வாதிகள், பிரதிவாதிகள் மீது உரிமை விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டடளை கோரி வழக்கு தொடர்ந்து, மனுதாரர் இந்நீதிமன்றத்தில் ஆஜராக தவறியதால் கடந்த 09.10.2025 அன்று அவர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கில் ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து

செய்யாமல் போனால் பிரதிவாதிகளால் வழக்கு விசாரணையில் பங்கு கொள்ளமுடியாது. இது போன்ற வழக்குகளில், இது போன்ற தருணங்களில் பிரதிவாதிகளுக்கு வழக்கில் பங்கு கொள்ள வாய்ப்பளிக்க வேண்டுமென்று மாண்பமை உயர் நீதிமன்றத்தின் பல முன்னோடி தீர்ப்புகள் உள்ளது. இருதரப்பையும் விசாரணை செய்து வழங்கும் தீர்ப்பு முழுமையானதாக இருக்கும் என்பதால் இந்த மனுதாரர் வழக்கில் பங்குகொள்ள மேலும் ஒரு வாய்ப்பளிக்க இந்நீதிமன்றம் கருதுவதாலும், இந்த மனுவை அனுமதிக்கலாம் என்றும், அதேசமயம் இந்த மனுதாரரால் காலதாமதம் ஏற்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு அந்த காலதாமதத்தை ஈடுசெய்யும் வகையில் மனுதாரர்கள், எதிர்மனுதாரர்களுக்கு செலவுத் தொகை வழங்கும்பட்சத்தில் மனுவை அனுமதிக்கலாம் என்றும் தீர்மானித்து இந்தப் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

<u>முடிவில்:-</u>

மனுதாரர்கள் எதிர்மனுதாரர்களுக்கு செலவுத் தொகையாக ரூ.500/-ஐ வருகின்ற 16.02.2026-ம் தேதிக்குள் செலுத்தும்பட்சத்தில் இந்த மனு அனுமதிக்கப்படும், தவறும்பட்சத்தில் தள்ளுபடியானதாகக் கருதப்படும். மீண்டும் இந்த மனு 17.02.2026 அன்று அழைக்கப்படும்.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் படித்துப் பார்த்து பிழை திருத்தம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 04 ஆம் நாளான இன்று என்னால் அவையறிய பரப்பட்டது.

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2026.02.04 17:38:10 +0530

சார்பு நீதிபதி,

வந்தவாசி.

மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் - இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் -இல்லை

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2026.02.04 17:38:17 +0530

சார்பு நீதிபதி,

வந்தவாசி.